பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை [03-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 334

# நாடாளுமன்ற தேர்தல் ஜனவரியில் நடக்கும்?

## சார்க் முடிந்த கையோடு அறிவிப்பு வெளிவரலாம்

லண்டன், நவம்பர் 3

சார்க் மாநாடு முடிந்த கையோடு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை அரசாங்கம் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அனேகமாக ஜனவரியில் தேர்தல் நடத்தக்கூடியதாக அறிவிப்பு வெளிவரும் என்று கொழும்பில் நம்பப்படுகின்றது.

பி.பி.ஸியின் சிங்கள சேவையில் இத்தகவல் நேற்று வெளியிடப்பட்டது.

வருட இறுதியில் அறிவிக்கப்படும் வரவு செலவுத் திட்டம் இம்முறை தேர்தல் கால வரவு செலவுத் திட்டமாக இருக்கும் என்றும்—

மக்களுக்கு சலுகை அளிக்கும் பல விடயங்கள் வரவு செலவுத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கும் என்றும்—

அரச ஊழியருக்கு 300 ரூபா சம்பள உயர்வும், அத்தியாவசியப் பொருள்களின் திடீர் விலை குறைப்பும் வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெற்றிருக்கும் என்றும்—

எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (உ-10)

## வடபகுதி யுத்த முனைக்கு கூடிய கடற்படையினர்!

### புதிய தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 3

கடற்படைச் சிப்பாய்களில் அதிகமானோர் வடபகுதி யுத்தமுனைக்குச் செல்ல வேண்டும்.

புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளென்சி பெர்னாண்டோ இப்படித் தெரிவித்தார்.

வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா கடந்தமாத இறுதியில் ஓய்வுபெற்றதை அடுத்து கிளென்சி பெர்னாண்டோ புதிய கடற்படைத் தளபதியாக கடந்த முதலாம் திகதி பதவி ஏற்றது குறிப்பிடத்தக்கது.

மோதல்கள் நடைபெறும் இடங்களில் உள்ள மக்களின் மனங்களை வென்றெடுக்க, படையினர் முக்கிய கவனம் செலுத்தவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். [இ-த]

## மண்டைதீவு கடலோரத்தில் அருகருகே ராணுவ சென்றி!

குருநகர், நவ. 3

மண்டைதீவு கடலோரப் பகுதி எங்கும் இராணுவத்தினரின் காவல் அரண்கள் ('சென்றி'கள்) காணப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் முப்பது அடிகளுக்கு ஒன்றாக — அடுத்தடுத்து வரிசையாக — ஓலைக் கொட்டில்களால் அமைக்கப்பட்ட அரண்கள் தென்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். (ஒ-51)

## பருத்தித்துறை கடலில் சூடு! மீனவர் ஒருவர் உயிரிழப்பு!;

பருத்தித்துறை முனைப் பகுதி கடலில் கடந்த வியாழன் இரவு மீன்பிடித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் ஒழுங்கையைச் சேர்ந்த தமியாம்பிள்ளை ஆசீர்வாதம் (38 வயது) என்பவர் உயிரிழந்தார். மத்தியாஸ் அம்புறோஸ் அன்ரன் [20 வயது] என்ற இளைஞர் காயமடைந்தார். காயமடைந்த அந்த இளைஞர் நீந்தி, பெரிய கண்டி வரையைச் சேர்ந்தார். இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

படகில் இருந்த வெளி இணைப்பு இயந்திரத்தையும் படையினர் அபகரித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-51-5)

## பூட்டான் மன்னர் வாங்சுக் கொழும்புக்கு வரமாட்டார்!

கொழும்பு, நவ. 3

எதிர்வரும் ஏழாம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் சார்க் உச்சி மாநாட்டில் பூட்டான் மன்னர் வாங்சுக் கலந்து கொள்ளமாட்டார்.

தாம் வெளிநாடு சென்றால், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டின் தீவிரவாதிகள் அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபடக்கூடும் என தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும்—

அதனால் நாட்டை விட்டு தாம் புறப்பட முடியாதிருப்பதாகவும்—

அவர் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கிறார்.

இதேவேளை—

இம்மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இம்மாதம் 8 ஆம் திகதியே கொழும்பு செல்வார் என்றும் இந்திய வானொலி தெரிவித்தது. [உ-எ-10]

## பிச்சைக்காரரைத் தேடி கொழும்பு நகரில் வேட்டை!

கொழும்பு, நவ. 3

கொழும்பு நகரில் பிச்சைக்காரர்கள் தேடப்பட்டு வருகின்றனர். பிச்சைக்காரர்களைக் கண்டால் உடனே பொலீஸார் "லபக்" என்று சுற்றி வளைத்துப் பிடித்துவிடுகின்றனர்.

கொழும்பு நகரின் டல

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 26 வருட ஆட்சியின் பின் கெனத் கவுண்டா தோல்வி!

லுஸாக்கா, நவ 3

சாம்பியாவின் புதிய ஜனாதிபதியாக திரு. ஸுலுபா நேற்றுப் பதவியேற்றார்.

பல கட்சிகள் கலந்து கொண்ட தேர்தலில் திரு. ஸுலுபா கடந்த 26 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்த திரு. கென்னத் கவுண்டாவைத் தோற்கடித்தார்.

திரு. ஸுலுபா பதவியேற்ற பின்னர் பேசுகையில், "சர்வாதிகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. புதிய யுகம் பிறந்துள்ளது" என்று கூறினார்.

திரு ஸுலுபா எதிர்க்கட்சிவேட்பாளராக போட்டியிட்டார். இவர் பல கட்சி ஜனநாயக முறை வேண்டி இயக்கம் நடத்தியவர் ஆவர்.

எதிர்க்கட்சிகளுக்கு இந்தத் தேர்தலில் கிடைத்த வாக்குகளை விட அரைவாசி வாக்குகளே கெனத் கவுண்டாவின் கட்சிக்குக் கிடைத்தது.

## ஆனையிறவில் தாக்குதல்

ஆனையிறவுப் படையினர் நேற்றுப் பகல் 11 மணியளவில் குறிஞ்சாத்தீவு, இயக்கச்சி, கொம்படிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். (ஒ-15)

### முச்சந்தி முரளி



அப்ப...... கவுண்டா கவுண்டார் என்டு சொல்லுங்கோ......!

## காங்கேசனில் தேங்கிக் கிடந்த உணவு பொருள்கள் புங்குடுதீவுக்கு!

### படையினர் எடுத்துச் சென்றனராம்

கொழும்பு, நவ. 3

காங்கேசன்துறை துறைமுகக் களஞ்சியத்தில் நீண்டகாலமாக வைக்கப்பட்டிருந்த சுமார் 500 தொன் உணவுப் பொருள்கள், படையினரால் தற்போது அகற்றப்பட்டு புங்குடுதீவிலும் மற்றும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் விநியோகிக்கப்படுகின்றனவாம்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இப்படித் தெரிவிப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

புங்குடுதீவுப் பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது 500 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேரைத் தவிர ஏனையோர் வெளியேறிவிட்டனர் என்று புனர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் ஒலிபரப்புடன் தொடர்புடையவர் கைது!

கொழும்பு, நவ. 3

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒலிபரப்புடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உள்ள தமது நண்பர் ஒருவரைச் சந்திக்க வந்த போதே, ஒலிபரப்புக் கூட்டுத்தாபன விசேட பாதுகாப்புப் படைப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டாராம். இத்தகவலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்கா தெரிவித்திருக்கிறார்.

கைது செய்யப்பட்ட நபர் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகிறார் என்றும் அறிவிக்கப்படுகிறது. [உ-எ]

### இனப் பிரச்சினைத் தீர்வு:

## அனைத்துக் கட்சி மாநாட்டின் யோசனைகள் தெரிவுகுழுவுக்கு

கொழும்பு, நவ. 3

இனப் பிரச்சினை சம்பந்தமாக அனைத்துக் கட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள், இதற்கென நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குத் தெரியப்படுத்தப்படும்.

அனைத்துக் கட்சி மாநாட்டின் முழு அறிக்கை கடந்த வியாழக்கிழமை நடந்தபோது இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்திற்கு அமைச்சர் சாகுல் ஹமீத் தலைமை வகித்தார்.

இனப்பிரச்சினை மற்றும் அரசமைப்புச் சட்ட 17 ஆவது திருத்தம்பற்றி சுதந்திரக் கட்சியுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் தற்போதைய நிலைபற்றி தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பிரஸ்தாபித்தனர்.

அரசமைப்பில் மேற்கொள்ளப்படவேண்டிய சில திருத்தங்கள்பற்றி பரிசீலிப்பதற்கு இப்பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் வெளிவரும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிசில் 15ஆம் திகதி பதவி ஏற்பு

மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்தின இம்மாதம் 15ஆம் திகதி புதிய இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்க ஓய்வு பெற்றதை அடுத்து இவரின் நியமனம் இடம்பெற்றது தெரிந்ததே.

சிசில் வைத்தியரத்தின இதற்கு முன்னர் கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதியாகக் கடமை ஆற்றியது குறிப்பிடத்தக்கது. [இ-த]

## ஹெலி சூடு

அராலிப் பகுதியில் நேற்றுப் பகல் 11-30 மணியளவில் ஹெலி கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதேசமயம் புன்னாலைக்கட்டுவன் பகுதியிலும் நேற்று முன்தினம் மாலை 5-15 மணியளவில் ஹெலி தாக்குதலை மேற்கொண்டது. [ஒ-5]

## மாதகலில் பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 3

மாதகல் கடற்பகுதியில் இருந்து நேற்றுக்காலை 7மணியளவில் படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதனால் வீடுகள் சில சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-15)

## ஷெல் வீச்சு

தீவகப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு படையினர் அராலியை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். (ஒ-5-15)

## ஆரம்பம்

சார்க் நாடுகளின் நிலையியல் குழுவின் 15 ஆவது கூட்டத் தொடர் நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது. (உ-த)

## தெற்கில் சயனைட் அருந்தி மரணம்

மாத்தறை, நவ. 3

அம்பாந்தோட்டைப் பகுதியில் இயங்கி வந்த தீவிரவாதக் குழு ஒன்றின் தலைவர் ஒருவர் பொலீஸாரின் பிடியில் சிக்க இருந்த சமயம் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டு வந்த ஜயந்த என்பவரே தற்கொலை செய்தவர் ஆவார். (இ - 165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பண்டத்தரிப்பில் 5000 ஓடுகளுடனும் நல்ல நிலையிலுள்ள மரங்களுடனும் பழைய வீடு. ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; இலட்சுமி ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை. [4368]

### தேவை

பாவித்த தும்பிளாளன சேஸ்ரா மெத்தைகள். ஸ்பொஞ்ச் மெத்தைகள் தனி பஞ்சு, தும்பு மெத்தைகள் அனைத்தும் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும். உடன் தொடர்பு: காலை 9 1 மணி வரை. புதிய இல. 234 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் [வைத்தி விலாசம் கம்பனிக்கு அருகாமையில்] (18594)

### மணப்பெண் தேவை

யாழ் இந்து 32 வயது U.K. மாணவர் விசா விக் MBA. படிக்கும் மணமகனுக்கு நட்சத்திரம் பூராடம் பாவம் 14/16 அழகான மணப்பெண் தேவை இங்கு வந்து விவாகம் செய்வர். ABCDE 328, நாவலர் றோட். (18651)

யாழ் இந்து 31 வயது கொழும்பில் சொந்தமாக லெட்ஜ் ஒன்று நடத்தும் மணமகனுக்கு, படித்த அழகான மணப்பெண் தேவை. நட்சத்திரம் பரணி லக்கினத்தில் ராகு கிரகபாவம் 16/16 ABCDE, 328, நாவலர் றோட். (18600)

### தவறிவிட்டது

ஒட்டகப்புலம், முறிவு நெரிவு வைத்தியர் பெனடிக்ற் செலலப்பா என்பவருடைய நீல நிற சூட்கேஸ் உடுப்பு ஞடனும் பேரிமாற்ட், பெனடிக்ற் லொறியின் வனஜ, ஆகியோரது அடையாள அட்டைகளும் ஓமந்தை - மன்னார் முதல் பஸ்ஸில் ஜெற்றிக்கு வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செல்லப்பா, பிரதான வீதி, ஆவரங்கால் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4376)

### சோதிடம்

கல்வியில் சித்திய? உத்தியோகம் கிடைக்குமா? தொழில் வெற்றி பெறுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும், கைரேகை விவாகப் பொருத்தம், எண் சோதிடம் பார்க்கப்படும் தொடர்பு: த சிவனந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதி நிலையம், 384, கோவில் வீதி நல்லூர் [8575

### விண்ணப்பப்படிவம்

கணித, விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் விற்பனைக்குண்டு. விலை ரூபா 3/- அண் அச்சகம். (ஷ்றொ நிதி நிறுவனத்திற்கு அருகாமையில்) 15 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (அறிவுறுத்தல்களையும் பரீலையிடலம்) (சி-0771)

### சனிமாற்றம்

28 - 10 - 91 சனி மாற்றம் ரூ. 7/- தீப வளி வெளியீடு எங்கும் விற்பனையாகின்றது. [ரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி கணிக்கப்பட்டது] எழுதியவர்: சுதர்ஸன். தங்கம் ஸ்ரோஸ் முத்திரைச் சந்தையடி, நல்லூர். (18578)

### மணமகள் தேவை

யாழ் இந்து பெற்றோர், கொழும்பு வங்கியில் தொழில் பார்க்கும் 33 வயது மகனுக்கு, படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். இல. 823, C/o உதயன். [4375]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L 91

## Day Classes

சகல பாடங்களுக்குமான வினா-விடை வகுப்புகள்

ஆரம்பம்: 4-11-91 8-00 மணி

## A/L 93

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

(சி 0764)

---

## The College of Higher Studies

Anaippanthi

மாலை நேர வகுப்புகள்

## A/L 92

சகல பாடங்களும் துரித பயிற்சி வகுப்புகள்

01 — 11 — 1991 இல் ஆரம்பமாகிவிட்டன.

பயிற்சிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படும்

## A/L 91

சகல பாடங்களுக்குமான துரித வினா-விடை வகுப்புகள்

01 — 11 — 1991 ஆரம்பமாகிவிட்டன அனுமதிக்கு முந்துங்கள்.

- பதிவாளர்.

[இ-0773]

---

## கலை, வர்த்தகக் கல்லூரி

C C A. யாழ்ப்பாணம்.

DAY CLASS

## A/L 92

பொருளியல்: — உதயன்
கணக்கியல்: — ஸ்ரீ
வர்த்தகம்: — இரட்டினம்
அளவையியல்: — பிரபல ஆசிரியர்

குறிப்பு: பாடசாலை செல்லும் மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

ஆரம்பம்: 06 — 11 — 1991 காலை 8 மணிக்கு

## A/L 92

மாணவர் கவனத்திற்கு புவியியல்: திரு. வேலாயுதபிள்ளை

ஆரம்பம்: 03 — 11 — 1991 ஞாயிறு 1—2 [இ 0770]

---

## "பச்சை வட்ட கருமாதிபீடம்"

(Green Circle Board)

### - பொருத்துனர் சேவை நிலையம் -

★ விவாகப் பொருத்துனர் சமாஜம் தொடங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற வசதியுள்ள இச் சமாஜத்தில் சேர விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்க.

★ உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பல்வேறு தரப்பட்ட தொழில் புரிவோரினதும் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு தகுந்த தேர்வு செய்ய உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

★ ஆதனங்கள் விற்பதற்கும், வாங்குவதற்கும் எம்மை நாடுங்கள். உங்களுக்குச் சாதகமான முறையில் நாம் ஒப்பேற்றித் தருவோம்.

நம்பிக்கையுடன் எம்மை நாடுங்கள்:

தொடர்பு:

எஸ். ஏ. தர்மலிங்கம்,
24, புறாடி லேன்,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(18596)

---

## சங்கானை வடிசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்

# பதவி வெற்றிடம்

### 1. பொதுமுகாமையாளர்

[அ] கல்வித்தகைமை:

விஞ்ஞான முதமாணிப் பட்டதாரி (பகுப்பாய்வு இரசாயனம்) அல்லது விசேட இரசாயனவியலில் 1ஆம் அல்லது 2ஆம் வகுப்புச் சித்தியுடன் பகுப்பாய்வுத்துறையில் குறைந்தது 5 வருட அனுபவம்.

[ஆ] சம்பளம்:

34 200 / 10 x 1200 — 46, 200

கூட்டுறவுச் சங்கங்களின் மேலதிகப் படிகளும் வழங்கப்படும்.

குறிப்பு: அனுபவம், தேர்ச்சிக்கு தக்க விதத்தில் பொருத்தமான விண்ணப்பதாரியின் சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

[இ] பிணை:

ரொக்கம் ரூபா 3000/- த்துடன் ஆதனப்பிணையும்.

### 2 மூலப்பொருள் கொள்வனவு உத்தியோகஸ்தர்

[அ] கல்வித்தகைமை:

மூன்று வருட அனுபவத்துடன் இரசாயனப் பாடம் உட்பட ஒரே தடவையில் க. பொ. த. (உயர்தரம்) சித்தியெய்தியவர்.

[ஆ] சம்பள அளவுத்திட்டம்:

21 600 — 31 800 / 10 x 480 — 9 x 600

கூட்டுறவுச் சங்கங்களின் மேலதிகப்படிகளும் வழங்கப்படும்.

[இ] பிணை:

5000/- ரொக்கம், ஆதனப்பிணை ரூபா 50,000/-க்கு குறையாது.

### 3. தட்டெழுத்தாளர் - 304. 8

[அ] கல்வித்தகைமை:

க. பொ. த. சாதாரணத்தில் தமிழ்மொழி எண்கணிதம் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியும் தமிழ் தட்டெழுத்தும் ஒரு பாடமாக இருத்தல் வேண்டும் நிமிடத்திற்கு 60 சொற்கள்.

[ஆ] சம்பளம்:

1005 — 1705 / 40 x 5 — 60 x 10

[இ] பிணை: ரொக்கம் ரூபா 2000/-

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகளுக்கான வயதெல்லை 21 — 40 விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும் விண்ணப்பங்கள் யாவும் 20-11-1991-ம் திகதி 12-00 மணிக்கு முன்னர் தபாலிலாவது அன்றி நேரிலோ தலைவர், சங்கானை வடிசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், பிரதான வீதி, சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

- தலைவர்.

சங்கானை வடிசாலைக் -
கூட். சங்கங்களின் சமாஜம்.

[இ-0873]

---

## கணித, விஞ்ஞான

ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

பொது உளச்சார்பு,
பொது அறிவு

ஆரம்பம்:- 15-11-1991
நேரம்:- 2-00 மணி

★ விண்ணப்பப்படிவங்களையும், விவரத்திரட்டினையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி:

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[சி/0761]

---

## THE COLLEGE OF HIGHER STUDIES

ANAIPPANTHI

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள் கல்வியாண்டு - 1992 / 93

பேராதனை பல்கலைக்கழக பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கான

*G. A. Q.*
*1st In Com.*
*G. S. Q.*

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்கள் சித்தி; அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 - 11 - 1991

குறிப்பு: 90 ஆம் ஆண்டு க. பொ. த. [உ. த] முடிவுகளை எதிர்பார்த்து இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

யாழ் / பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு நெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

[இ-0772] - பதிவாளர்.

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### பாலசுப்பிரமணியம் தேவராசா

(வீரவேங்கை தம்பி)

தோற்றம்: 17 - 01 - 1971
மறைவு: 19 - 09 - 1991

19 - 09 - 1991இல் மணலாற்றில் நடந்த மோதலில் வீரமரணமடைந்தார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 03 - 11 - 1991 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

க. பாலசுப்பிரமணியம்.
தந்தையார்,

124, நாவலர்றோட்,
யாழ்ப்பாணம்.

(18546)

---

## நாலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் அரவணைப்பில்:
12 - 07 - 1959

அன்னியன் அழிப்பில்:
19 - 10 - 1987

திதி:
03 - 11 - 1991



### செல்வன் துரைஜயா பாலச்சந்திரன்

(அமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் மகன்)

உன் பிரிவு மெய்யென்று சொல்ல
நினைவுகள் விடுவதில்லை
குடும்ப அன்புப் பூவாகி கரியாகி
கனிய முன்னர் காணவன் கவர்ந்த
நாலாண்டு திதியின்று
நாலாயிரம் ஆண்டுகள் போனாலென்ன
உந்தன் நினைவுகள் என்றும்மலராவே.

என்றும் உன் நினைவால் வாழும்,

- குடும்பத்தினர்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

[18587]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதிய முடிவின் உள்ளார்த்தம்

நாற்படைகள் சேர்ந்த விசேட கூட்டு நடவடிக்கை அமைப்பை மீண்டும் இயங்கச் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒடுக்குவதே அந்த விசேட படை அமைப்பின் பிரதான பணியாக இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதே விசேடபடை அமைப்பு முன்னரும் இயங்கி வந்தது. தென்னிலங்கைத் தீவிரவாத இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுனையை [ஜே. வி. பி.யை] ஒடுக்கும் பணியைச் செய்வதற்காகவே அது ஆரம்பிக்கப்பட்டது.

அந்தவிசேடபடை அமைப்பு ஜே. வி. பி.யின் முக்கிய தலைவர்களை மடக்கிப் பிடித்தது ஏதோ உண்மைதான். அதனைக் காலாக வைத்து பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தென்னிலங்கையில் மறைமுகமாகக் கொல்லப்பட்டார்கள் என்பது மறைக்கமுடியாதது.

அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஜே. வி. பி. இயக்கத்தினர் மிகக் குறைவானவர்களே. மிகமிக அதிகமானவர்கள் அரசாங்கக் கட்சியை ஆதரிக்காத பொது மக்கள். அவர்கள் ஜே. வி. பி. ஆதரவாளர்கள் அல்லது ஆதரவாளர்களின் உறவினர்கள் என்று நாமம் சூட்டப்பட்டு, இரவில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு, வீதிகளில் எரிக்கப்பட்டு சடலங்களாக காலையில் கண்டு பிடிக்கப்பட்டார்கள். பலரின் சடலங்கள் நீரோடைகளிலும், ஆறுகளிலும் மிதக்கக் காணப்பட்டன.

மேலும் அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு லட்சம் பேர் "காணாமற் போனவர்கள்" பட்டியலில் சேர்க்கப்பட்டனர் என மதிப்பிடப்படுகிறது. இது குறித்துக் கடந்த மாதம் ஸ்ரீலங்கா வந்த, மனித உரிமைகள் — ஆட்கடத்தல், காணாமற்போனோர் விவகாரம் பற்றிய குழுவுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வளவுஅட்டூழியங்களின் பின்னரும், ஜே. வி. பி. இயக்கம் இன்னும் அழிந்துவிடவில்லை என்பதே உண்மை.

இதனை அரசாங்கம் உணர்ந்ததோ என்னவோ தெரியவில்லை. இப்போது விசேட கூட்டுப் படை அமைப்பு மூலம் விடுதலைப் புலிகளை ஒடுக்க முனைந்திருக்கிறது. ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் செயலற்றுப் போன சிறப்புப் படை அமைப்புக்குப் புத்துயிர் ஊட்ட முனைந்திருக்கிறது.

இளைப்பாறும் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்காவுக்கு பதவி ஒன்று வழங்குவதற்காக சிறப்புப் படைக்குப் புத்துயிர் ஊட்டப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. ஆனால் அதனைச் சரியான காரணமாக, அர்த்தம் உள்ள நடவடிக்கையாகக் கருத முடியாது.

தமிழர் பிரச்சினையை இராணுவத் தீர்வு மூலம் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்ற கோட்பாட்டுடனும், நம்பிக்கையுடனும் அரசாங்கம் செயற்படுகிறது என்பதையே இந்தத் தீர்மானம் மிகத் தெளிவாகப்புலப்படுத்துகிறது.

தெற்கில் ஜே. வி. பி.யை அழிப்பதாகக் காட்டிக் கொண்டு, அரசாங்கக் கட்சிக்கு விரோதமானவர்களைக் கொன்று குவித்தது போல, விடுதலைப் புலிகளை ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு தமிழர்களை அழித்துவிட வேண்டும் என்ற உள்ளார்த்த நோக்கத்துடனேயே புதிய முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எள்ளளவேனும் சந்தேகம் இருக்க முடியாது!

## 'இசையருவி' இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 3

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கி வழங்கும் நாதஸ்வர கானவாரிதி வி. கே. பஞ்சமூர்த்தியின் நாதஸ்வர இசை ஒலிப்பதிவு நாடாவான 'இசையருவி' இன்று வெளியிடப்படுகிறது.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு நடைபெறும் இவ்விழாவுக்கு விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமை வகிப்பார். திரு. தேவர் வரவேற்புரை நிகழ்த்த, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் முதல் நாடாவை வெளியிட்டு வைப்பார்.

விடுதலைப் புலிகளின் யாழ் பிராந்திய சிறப்புத் தளபதி திரு. தமிழ்ச்செல்வன் ஒலிப்பதிவில் பங்கேற்ற கலைஞர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்த பின்னர், மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, மற்றும் வண. பிதா. பிரான்ஸிஸ் யோசப் அடிகளார், திரு. ந. வீரமணி ஐயர், நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன், திரு. பொன். சுந்தரலிங்கம், நவாலியூர் திரு. க. சச்சிதானந்தன், கம்பன் கழகம் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்.

இந்த இசையருவி ஒலிப்பதிவு நாடாவில் பத்து தாயக விடுதலைப் பாடல்களை திரு. வி. கே. பஞ்சமூர்த்தி நாதஸ்வர இசையாக்கி அளித்துள்ளார். நாதஸ்வர இசையுடன் தவில், மிருதங்கம், தபேலா, வயலின் உட்பட மேற்கத்தைய இசைக்கருவிகளையும் இணைந்து உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் பலி; அவரது மகள் காயம்

யாழ்ப்பாணம் நவ. 3

யாழ்ப்பாணம், கச்சேரியடியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், அதில் பயணம் செய்த பெண் ஒருவர் மரணமானார். அவரது மகள் காயமடைந்தார்.

பளை, அல்லிப்பளையைச் சேர்ந்த சின்னத்தம்பி நல்லம்மா [48 வயது] என்பவரே இறந்தவர் ஆவார். காயமுற்ற அவரது மகள் சின்னத்தம்பி அருந்ததி [19 வயது] என்பவர் ஆவார்.

மரணமானவர் அவரது சகோதரரின் உதவியுடன் மோட்டார் சைக்கிளில், தமது மகளுடன் வந்த சமயம், பள்ளம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் இறங்கியபோது இருவரும் தூக்கிவீசப்பட்டனர் என்றும்—

தலையில் பலத்த அடியுண்ட நல்லம்மா நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரணமானவர் கடந்த மாதம் சத்திர சிகிச்சை ஒன்றைச் செய்து கொண்டவர் என்றும், அதற்கான "கிளினிக்"குக்கு யாழ் ஆஸ்பத்திரி நோக்கி வந்த சமயமே விபத்து நடந்தது என்றும் கூறப்பட்டது. [ஒ-15]

## கொம்படிக்கு மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம், நவ. 3

நல்லூர், முத்திரைச்சந்தையடியில் இருந்து இயக்கச்சி — கொம்படிப் பகுதி வரை தற்பொழுது மினிபஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

அதிக எண்ணிக்கையானோர் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வதைக் காண முடிகின்றது.

கொம்படிப் பாதை வழியாக பெரும் சிரமங்களின் மத்தியில் பலர் தினமும் யாழ். வந்து சேருகின்றனர்.

இதே வேளை —

பருத்தித்துறையிலிருந்து கொம்படிக்கு மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் மாலை 4.00 மணிக்கு பருத்தித்துறையில் இருந்த மினிபஸ் ஒன்று கொம்படிக்குப் புறப்படுகிறது. [ஒ-த-5-165]

## புதுடில்லி இடைத்தேர்தல் ஒத்திவைப்பு

புதுடில்லி, நவ. 3

பிரபல இந்தி நடிகர்கள் போட்டியிடும் புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இத்தேர்தல் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்தது. சுயேச்சை வேட்பாளர் ஒருவர் மரணமானதைத் தொடர்ந்தே இடைத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் நடிகர் ராஜேஷ் கன்னாவும் பாரதீய ஜனதா வேட்பாளராக நடிகர் சத்துருகன் சின்ஹாவும் இந்த இடைத்தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். [ஒ-எ]

## ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பானின் கியோட்டோ, நாரா ஆகிய நகரங்களில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்சர் அளவையில் 4.9 என்ற அளவுக்கு இந்த நிலநடுக்கம் இருந்ததாகவும், மக்கள் முன்னேற்பாடாக பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்திருந்ததால் இழப்புகள் தவிர்க்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-10)

## ஜீ. சி. ஈ. (சா/த) முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 3

டிசம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் வகையில், யாழ். கல்வி அலுவலகம் நடத்தும் முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி (வியாழன்) ஆரம்பமாக இருக்கிறது.

14 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும். (ஒ-5)

## வங்கி ஊழியருக்கு நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 3

வலிகாமம் பிரிவிலுள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்களுக்கான கலந்துரையாடல், நாளை மாலை 3 மணிக்கு, யாழ். இந்துக்கல்லூரி, குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [ஒ]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## மரக்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 3

தமிழீழ ஆய்வு நிறுவனம், சுமார் ஐம்பதினாயிரம் எலுமிச்சை மரக்கன்றுகளையும், ஆயிரக்கணக்கான அகத்தி, பலா, நெல்லி ஆகிய மரக்கன்றுகளையும் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [ஒ]

## கிறிஸ்தவ தமிழ் இலக்கிய கழகம்

யாழ்ப்பாணம், நவ. 3

கிறிஸ்தவ தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பு புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். யாழ். அடைக்கல நாயகி ஆலயவித்தியாலயத்தில் நடக்கும் அங்குரார்ப்பண கூட்டத்துக்கு வித்தியாலய அதிபர் என். தார்சீசியஸ் தலைமை வகிப்பார். [அ]

## வவுனியா அரச ஊழியருக்கு அவகாசம்

கொழும்பு, நவ. 3

இதுவரை கடமைக்குத் திரும்பாத வவுனியா மாவட்ட அரசாங்க ஊழியர்கள் அனைவரும் இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்பதாகக் கடமைக்குத் திரும்பவேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அவர்கள் வவுனியா மாவட்டத்தில் வேலை பார்க்கும் அரச திணைக்களங்கள் ஊடாகவே வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. [க-எ]

## கல்லாறு உ. அ. அ. பிரிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லாறு உதவி அரசாங்க அதிபர் பிரிவு என்ற புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## ஈழத்தமிழர்கள் கைது!

வேதாரண்யம் அருகில் இரண்டு இலங்கைத் தமிழர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 4 நாட்டு வெடிகுண்டுகளும் 175 லீற்றர் டீசலும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை— 210 லீற்றர் டீசலை இலங்கைக்குக் கடத்த முயற்சித்ததாக கூறப்படும் வேறு மூன்று பேரை திண்டுக்கல் அருகில பொலிஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## நோபல் பரிசு பெற்ற பர்மிய எதிர்க்கட்சித் தலைவி உயிராபத்தான நிலையில்

ரங்கூன், நவ. 3

பர்மிய எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஆங் சென் சுகி உயிராபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டுக்குரிய நோபல் சமாதானப் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி சுகி கடந்த இரண்டரை வருடங்களாக இராணுவ ஆட்சியினரால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பர்மாவுக்கு விஜயம் செய்த ஐ. நா. மனித உரிமைகள் குழுவினர் திருமதி சுகியைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து அவர் கடந்த ஒரு வார காலமாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அதனாலேயே அவரின் உடல் நிலை மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று நேபாளத்தில் கூடிய அனைத்துலகச் சமய மாநாடு திருமதி சுகியை உடனடியாக விடுவிக்குமாறு பர்மிய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. ஜப்பானிய அரசும் திருமதி சுகியை விடுவிக்குமாறு பர்மிய அரசிடம் நேற்றுக் கேட்டது. (அ-எ-10)

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 3

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் பரீட்சை அடுத்த வருடம் ஜனவரி 25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது. [அ]

## மொஸாட் அறிக்கை நாடாளுமன்றில்

கொழும்பு நவ. 3

ஜனாதிபதி பிரேமதாசவிடம் கடந்த செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்ட மொஸாட் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, அச்சிடப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். [இ-த]

## புலிகளைப் பிடிக்க புதிய படகுகளாம்!

சென்னை, நவ. 3

தமிழ்நாட்டுக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக இந்திய கடற்படையினர் முதல் தடவையாக ஹோவர் கிராப்ட் (Hover Craft) என்னும் படகுகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்திய கடற்படைத் தளபதி எல். இராம்தாஸ் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பிரஸ்தாப படகுகள் தண்ணீரில் மேலெழுந்தவாரியாக பாய்ந்து செல்லக் கூடியவை என்றும், ஆழமில்லாத கடல் வழியாக தமிழ்நாட்டுக்குள் ஊடுருவும் விடுதலைப் புலிகளை இப்படியான படகுகள் மூலம் கண்டு பிடித்து விட முடியும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## காங்கேசனில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்வு. புனரமைப்பு அமைச்சுக்கு படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

யாழ் மாவட்ட மக்களுக்கென நீண்டகாலத்துக்கு முன்னர் காங்கேசன்துறை முகத்தில் இறக்கப்பட்ட இந்த 500 தொன் உணவுப் பொருள்களும் அங்கு நிலவும் சூழ் நிலை காரணமாக அகற்றப்படாதிருந்தன. [இ-165]

## ஜப்பானும் ஏவுகணை செலுத்தியது

டோக்கியோ, நவ. 3

ஜப்பானிய ஏவுகணை ஒன்று முதல் தடவையாக கலிபோர்னிய ஏவுகணைத் தளத்தில் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

வானத்தில் வைத்து திசையை மாற்றும் சக்தியும், உபரகத்தைக் கட்டுக் குறைக்கும் சக்தியும் இந்த ஏவுகணைக்கு உண்டு என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய தற்பாதுகாப்பு படையினரின் உபயோகத்துக்காக எதிர்காலத்தில் இந்த ஏவுகணை பயன்படுத்தப்படும். (இ)

## 1,500 கைதிகளுக்கு மன்னிப்பு

தீபாவளியை முன்னிட்டு ஆயிரத்து 500 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நீதியமைச்சர் ஹமீத்தின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி பிரேமதாஸா இந்த மன்னிப்பை வழங்குகிறார்.

சிறையில் இருக்கும் ஏனையோரின் மரணதண்டனை ஆயுள் தண்டனையாகவும், சிறைத்தண்டனை ஒரு வருடத்துக்கு மூன்றுவாரம் என்ற அடிப்படையிலும் குறைக்கப்படும். (உ-த)

## நெல்லியடியில் ஹெலி தாக்கு.

நெல்லியடி நாவலர் மடப் பகுதியில் நேற்றுக் காலை பத்துமணி அளவில் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. [இ-165]

## வாழ்க்கைச் செலவு

அக்டோபர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1138.8 என்று புள்ளிவிவர மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பிச்சைக்கார...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இடங்களிலும் நேற்றும் பெரும் எண்ணிக்கையான பிச்சைக்காரர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிடிபட்ட பல ஆயிரக்கணக்கானவர்கள் தெற்கில் உள்ள கிராமம் ஒன்றுக்கு அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர்.

அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறவுள்ள "சார்க்" மாநாட்டை கொழும்பு நகரைச் "சுத்தப்படுத்தும்" நோக்கத்துடன் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கொம்படியில் கட்டுமரச் சேவை

வடமராட்சி, நவ. 3

கொம்படிப் பாதையில் மீண்டும் கட்டுமரச் சேவை நடைபெற்று வருகிறது.

கட்டுமரச் சேவையில் ஒரு வழிப் பயணத்துக்கு ஆளுக்கு 40 ரூபாவும் சைக்கிளுக்கு 40 ரூபாவும் அறவிடப்படுகிறது.

[இ-165]

## ஹெலியைக் கண்டு விழுந்தவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 3

தென்னைமர உச்சியில் இருந்து ஒருவர், ஹெலி இரைச்சலுடன் தமது திசையை நோக்கி வருவதைக் கண்டு, பதற்றமடைந்து, கீழே விழுந்து படுகாயமுற்றார்.

நேற்று முன்தினம் மாலை நீர்வேலியில் நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆசிரியர் நாகலிங்கம் [41 வயது] என்பவரே காயமுற்றார்.

சீவல் தொழிலாளியான இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

[ஓ-15]

## பாவனையாளர் குழுக்களை அரச அதிபர் சந்திக்கிறார்

யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களையும், அவர்களின் பிரிவுகளில் உள்ள பாவனையாளர் பாதுகாப்புக்குழு அங்கத்தவர்களையும் யாழ். அரச அதிபர் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவினருக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். செயலகத்திலும்—

தென்மராட்சிப் பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவினர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் —

வடமராட்சிப் பகுதியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவினர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

[அ-5]

## மட்டக்களப்பில் தமிழர் மீது தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 3

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அப்பாவித் தமிழ் மக்களை, ஸ்ரீலங்காப் படையினர் தாக்கியும், கைது செய்தும் வருகின்றனர்.

கைது செய்யப்படுவோர் படையினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி, அவதியுறுகின்றனர்.

நேற்றுக் காலை மாவடிச்சேனைப் பகுதியில் நான்கு தமிழர்களும், கடந்த வியாழக்கிழமை வெருகல் பகுதியில் கணேசன் சிவகரன் என்ற இளைஞரும் கைது செய்யப்பட்டனர் என்றும்—

கடந்த புதன்கிழமை மணற்சேனைப் பகுதியில் தமிழ் மக்களை, படையினர் தாக்கினர் என்றும் —

மல்லிகைத்தீவைச் சேர்ந்த கந்தசாமி ஜெய்சங்கர் (19 வயது) என்ற இளைஞரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[ஓ-5]

## கடற்படையின் உதவி இன்றி யுத்தத்தில் வெல்லமுடியாது

### முன்னாள் தளபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 3

நான்கு பக்கங்களும் நீரினால் சூழப்பட்டுள்ள இலங்கையில் கடற்படையின் பங்களிப்பு இன்றி தற்போதைய யுத்தத்தில் வெல்லமுடியாது.

கடந்த மாத இறுதியில் ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா ஓய்வு பெறுவதற்கு முன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

1953 ஆம் ஆண்டு நான் "றோயல் சிலோன் நேவி"யில் சேரும்போது 300 வீரர்களையும் 35 அதிகாரிகளையுமே அது அப்போது கொண்டிருந்தது. ஆனால் கடற்படை தற்போது 8 ஆயிரம் வீரர்களையும் 600 அதிகாரிகளையும் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும் ஆனந்த சில்வா தெரிவித்தார்.

கடற்படையிடம் தற்போது மூன்று வேவுக் கப்பல்களும், 8 பீரங்கிப் படகுகளும், 4 பாரிய கப்பல்களும், எதிரிப் படகுகளை மடக்குவதற்கான 15 அதிவேகப் படகுகளும், 10 ரோந்துப் படகுகளும் மேலும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட படகுகளும் உள்ளன என்றும் அவர் கூறினார்.

தமது பதவிக் காலத்தில் 1987 இல் வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்ட "ஒப்பரேஷன் லிபரேஷன்", 1990 இல் ஊர்காவற்றுறை — மண்டைதீவில் இடம்பெற்ற "ஒபரேஷன் திரிவிடபலய", 1991 இல் ஆனையிறவில் இடம்பெற்ற "ஒபரேஷன் பலவேகய" ஆகியவற்றில் கடற்படையினரின் பங்கு மகத்தானது என்று ஆனந்த சில்வா தெரிவித்தார்.

[இ-165]

## பத்மநாபா கொலை:

## வசந்தன் என்பவர் கைதாம்

சென்னை, நவ. 3

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் ஏ. பத்மநாபாவும் மற்றும் 14 பேரும் கொலை செய்யப்பட்டது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வசந்தன் என்பவரை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சென்னை, அடையாறில் வைத்து கைதான இவர் இந்த வழக்கை விசாரித்து வரும் தனி நீதிபதி முன்பு ஆஜர் செய்யப்பட்டார்.

இம் மாதம் 7 ஆம் திகதி வரை இவரை பொலீஸ் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

(இ-த)

## அனைத்துக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரை காத்திருப்பது என்றும் அனைத்துக்கட்சி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

நாடாளுமன்றத்திற்கு மேலதிகமான இரண்டாவது பேரவை ஒன்றை அமைப்பது என்ற யோசனை குறித்தும் வியாழக்கிழமை நடந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

நாளை திங்கட்கிழமை அனைத்துக்கட்சி மாநாடு மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டது.

(அ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சாரதாதேவி குணரத்தினம்

திருமதி சாரதாதேவி குணரத்தினம் [இளைப்பாறிய ஆசிரியை - ஹூல்வண்டோல்] 30-10-1991 அன்று கொட்டாஞ்சேனையில் காலமானார்.

இவர் காலம் சென்ற தம்பர் நமசிவாயம், இளைப்பாறிய ஆசிரியர் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் [விமன்னாமம் தெல்லிப்பளை] அப்பாத்துரை குணரத்தினத்தின் அன்பு மனைவியும், சதாசகரின் (U. K.) அருமைத் தாயாரும், சிவமணி, சிங்கராசா, மணிமேகலாதேவி, மகேஸ்வரன், சாவித்திரிதேவி [இளைப்பாறிய ஆசிரியை. மகாஜனாக் கல்லூரி] Dr. அன்னலஷ்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசலக்சுமி, நடராசா, துரைச்சாமி, Dr. நற்குணம், சபாரத்தினம், திரவியம், அமுதம் ராசமணி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (2-11-1991) நேற்று கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

32, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ந. சிங்கராசா
[சகோதரன்]

(4374)

### அருட்செல்வி மேரி கெலனா ஐயம்பிள்ளை

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமாகிய அருட்செல்வி மேரி கெலனா ஐயம்பிள்ளை பாஷையூர் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் 02-11-91 [நேற்று] காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 03-11-91 [இன்று] மு. ப 10.00 மணிக்கு யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் திருப்பலியுடன் இடம்பெறும்.

தகவல்:
மாகாணத் தலைவி
திருக்குடும்ப மாகாண இல்லம்
யாழ்ப்பாணம்.

[18427]

### பொன்னுச்சாமி தயானந்தராசா

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், 143, 4ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு பொ. தயானந்தராசா அவர்கள் 28-10-91 அன்று லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னுச்சாமி - திருமதி பொ. சிவக்கொழுந்தம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், அரியதேவியின் அன்புக் கணவரும், இராஜ்குமார், சசிக்குமார், மைதிலி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பொ. செல்வராஜேஸ்வரி [ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்), Dr. மாணிக்கராசா [லண்டன்], திருமதி தசலாவதி [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

தகவல்:
திருமதி பொ. செல்வராஜேஸ்வரி
(சகோதரி)

ஓட்டுமடம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(18658)

## ஒப்படைக்கவும்

வண்ணை பெருமாள் கோவில் மண்டபத்தில் நேற்று மாலை எனது கைப்பையை (Hand Bag) கோவிலுக்குள் செல்வதற்காக ஒப்படைத்துச் சென்றபோது தவறிவிட்டது. அதனை எடுத்தவர்கள் இந்தப் பெறுமதி வாய்ந்த கைப்பையை பின்வரும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். இதற்கு தகுந்த சன்மானம் உடன் வழங்கப்படும்.

நா. நடராஜா
12, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.

(18428)

## NEW SCIENCE ACADEMY

**JAFFNA.**

★ தாவரவியல் ★

● அங்கியஸ்பேர்ம்களின் உருவவியல் ●
[Morphology of Angiosperms]

★ திரு. வி. எஸ். குணசீலன் ★

செவ்.
புதன் } 2.30 - 3.30பி.ப.

ஆரம்பம்:
04-11-1991
Mon. 2-30 p.m.

★ O/L பரீட்சை நடைபெற்றபின்னரேயே 93ஆம் கல்வியாண்டுக்கான தாவரவியல் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

[சி-0774]

## நன்றி செலுத்தும் ஆராதனை

### அமரர் A. C. கனகராசா

காலம் சென்ற அமரர் A. C. கனகராசாவின் நன்றி செலுத்தும் ஆராதனை கோப்பாய் பரி. கன்னி மரியாள் ஆலயத்தில் 04-11-1991 திங்கட்கிழமை மாலை 3 30 மணிக்கு நடைபெறும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

[18657]

## கலை, வர்த்தகக் கல்லூரி

**C. C. A.**

**யாழ்ப்பாணம்.**

**A/L 91**

வினா விடை வகுப்புகள் நடைபெறுகின்றன.

பொருளியல்: பணம் வரவு செலவுத்திட்டம்.
கணக்கியல்: கம்பனி முடிவுக் கணக்கு.
வர்த்தகம்: அளவையியல்;

குறிப்பு:
(1) கடந்த 15 வருட வினா - விடை வகுப்புகள் நடைபெறும்.
(2) நேர அட்டவணை 8 மணி முதல் 1 மணி வரை.

[சி-0756]

## யாழ். கல்வி அலுவலகம் நடத்தும் முன்னோடிப் பரீட்சை க. பொ. த. (சா/த) — 1991

### நேரசூசி

| திகதி | பாடம் | | | நேரம் |
|---|---|---|---|---|
| 6-11-91 | சமூகக்கல்வியும் வரலாறும் | I | — | மு. ப. 8-00 — 9-00 |
| | | II | — | மு. ப. 9-30 — 12 30 |
| 7-11-91 | ஆங்கிலம் | I | — | மு. ப. 8-00 — 10-00 |
| | | II | — | மு. ப. 10-30 — 12-30 |
| 8-11-91 | சமயம் | I | — | மு. ப. 8 00 — 9-00 |
| | | II | — | மு. ப. 9-30 — 11 30 |
| 9-11-91 | மொழியும் இலக்கியமும் | I | — | மு. ப. 8-00 — 8-45 |
| | | II | — | மு. ப. 9-00 — 11-00 |
| | | III | — | மு. ப. 11-30 — 1 30 |
| 11-11-91 | விஞ்ஞானம் | I | — | மு. ப. 8-00 — 9 00 |
| | | II | — | மு. ப. 9-30 — 12-30 |
| 12-11-91 | கணிதம் | I | — | மு. ப. 8-00 — 9-00 |
| | | II | — | மு. ப. 9-30 — 12-30 |
| 13-11-91 | அழகியற் பாடங்கள் சித்திரம் | I | — | மு. ப. 8-00 — 9-00 |
| | | II | — | மு. ப. 9-15 — 11-15 |
| | | III | — | மு. ப. 11-30 — 1-30 |
| 14-11-91 | தொழில்நுட்பம் | I | — | மு. ப. 8 00 — 9-00 |
| | | II | — | மு. ப. 9-30 — 12-30 |
| | வர்த்தகமும் கணக்கியலும் | I II | — | மு. ப. 9-30 — 12 30 |

கல்விக் கிளைக்காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(சி/0874)

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், [illegible] 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 3-11-1991 இல் [illegible] பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org